27 MAY 1963

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௬௩	மலர்
	சுபகிருது, பங்குனி.	
௩௮	1963 மார்ச், ஏப்ரல்.	௧௨

காப்பியமும் கருத்தும்

புலவர். தி. நா. அறிவு ஒளி

காப்பியமும், தனிக் கவிதையும் பெருமை—சிறுமையால் வேற்றுமை உடையன. ஏனைய தன்மைகளில் ஒற்றுமை வாய்ந்தன.

காப்பியம் சுவைகனிந்த கதை தழுவிய பல பாக்களான் பல்வேறு உணர்ச்சிகள், மெய்ப்பாடுகள், செய்திகள், நயங்கள், அணிகள் முதலியன பொதுளப்பாடப் பெறுவது. தனிக்கவிதை ஒரே பாவால் (அன்றி ஒருசில பாக்களால்) ஒரு பொருள், ஒரு நிகழ்ச்சி, ஓர் உணர்ச்சி அமையக் குறிப்பிட்ட எல்லையில் சுருங்கிய அளவில் வடித்தெடுத்த உருவில் இயற்றப் பெறுவது.

காப்பியத்தின் உயிர்நோக்கம் கதையை உணர்த்துவதா? கருத்தை உணர்த்துவதா? காப்பியம் கதையின் வாயிலாகக் கருத்தை உணர்த்துவதேயாம்.

உலகின் பழம் பெருங் காப்பியங்கள் (இலியத், ஒதீசி போன்றவை) கருத்தை உயிர் நிலையாகக் கொண்டே கதை கூறுவதை அறிவோம். எந்த நாட்டுக் காப்பியத்திலும் இந்நிலை உள்ளது. காப்பியத்தில் பச்சையாக—நேரடியாகக்—கவிஞன் கருத்தை மட்டும் முழக்கம் செய்ய வியலாது. அறநூல் ஆசிரியர்கள் அவ்வாறு செய்யலாம். தனிக் கவிதையிலும் 'இலைமறை காய்மறை யாகவே' கருத்து விளக்கம் இடம் பெறும். காப்பியத்திலோ கதைப் போக்குக்கு ஏற்றபடி கால, இடச் சூழ்நிலைப் பொருத்தங்களுக்குத் தக, கதை மாந்தரின் பண்பு—அறிவு—நிலை—வயது—இயல்பு—உணர்வு—செயல் ஆகிய அமைப்புகட்கு ஏற்ப மிக மென்மையான முறையில் கருத்தை வெளியிட வேண்டும்.

காப்பியம் பெரும் பாலும் ஏதேனும் ஒப்பற்ற ஒரு கருத்தையே உயிர் நிலையாகக் கொண்டு எழுகிறது. சான்றாக இராமகாதை 'பிறனில் விழைதல் தீமை பயக்கும்' என்பதை வற்புறுத்துகிறது. பாரதக்கதை 'உடன் பிறப்பினரின் பகைமையின் தீமையை—பொருள் பிரிவினை பற்றியதை—விளக்கி அறிவூட்டுகிறது. அரிச்சந்திரன் கதை' வாய்மையின் நன்மையை' வற்புறுத்துகிறது. கண்ணகிக் கதை 'கற்பின் விழுப்பத்தை' நிலை நாட்டுகிறது. இவ்வாறு எல்லாக் காப்பியங்களும் ஒரு உயிர்நிலைக் கருத்தை நடுவாகக்கொண்டு சுழலும். ஆயின் அக்காப்பியங்களின் இடையிலேயே பல்வேறு நற்கருத்துக்களை விளக்கி வற்புறுத்துவதும் கவிஞர்தம் மரபாக விளங்கக் காண்கிறோம்.

காப்பியம் (கதை) பயில்வோர் 'கதைச்சுவை' ஒன்றினை மட்டுமே போற்றுவதால் அதைப் பயில்வதன் முழுப்பயனும் பெறாதவராகி 'பொழுது போக்கி' ஓய்வர். காப்பியத்தைக் (கதையைக்) கற்று, அதன் பயனாக அதுகூறும் ஒப்பற்ற கருத்தைப் போற்றி உணர்ந் தொழுகுதலே கல்வியின் பயனாகும்.

கதைச்சுவை கெடாமல் கருத்தாட்சி செய்வது ஓர் அருங் கலையாகும். இவ்வகையில் ஆங்கில நாடகக் கவிஞர் 'சேக்சுபியர்' தனித்திறன் சான்றவர். நந்தமிழகத்துக் காப்பியக் கவிஞர்கள் பலர் இத்திறன் கைவரப் பெற்றவரே. கவிஞர் தலைவர் வீரகவிஞர் இவ்வகையில் ஒப்பற்ற திறனுடையவராக விளங்குகிறார். வீரகவிஞர் பாடிய அரிச்சந்திரன் காதையில் வாய்மையை வற்புறுத்துதலே உயிர்க் கொள்கையாம். அதனை வெற்றியோடு செய்த வீரகவிஞர் காப்பியத்தினிடையிடையே ஒல்லும் வகையெல்லாம் அறக்கருத்துக்களையும் நல்லுண்மைகளையும் ஆளுந்திறன் பாரட்டற்பாலதாம்.

அயோத்தி மாநகரின் வளத்தினைப் பலவாறு புனைந்து பாடிவரும் வீரகவிஞர் அயோத்தி மக்களின் இயல்பினை அழகாக விளக்குகிறார். அந்நகர மக்களின் உள்ளத்தில் குடி வாழ்வது அறம்! அந்நாட்டார் யாவருடைய தோள்களிலும் நீங்காமல் நிலையாகவாழ்வது திறம் (ஆண்மையாற்றல்) அம்மக்களின் கைகளிலிருக்கும் கருவிகளில் செழுமையான கதிரவனின் ஒளியைப்போன்ற சுடரொளி நிலைபெற்றிருப்பதாம். அந்நகரம் பெண்களின் அழகிய கண்களில் தம் காதலர்களிடம் ஊடல் கொண்டு பிணங்குகின்ற 'இன்பக் கொடுமை' எப்போதும், நீங்காமல் வாழும்! அன்புப் பிணக்கு நீங்காமலிருந்தால் இன்ப இணக்கமும் நீங்காமல் இருந்து தானே தீரும். ஊடுதல் காமத்திற்கின்பம்; அதற்கின்பம்

கூடிமுயங்கப் பெறின். என்பது குறள் கூறும் நடைமுறை உண்மையன்றோ?

> "அறம் இருக்கும் மனத்தில் அனைவர்க்குந்
> திறம் இருக்கும் புயத்தில் செழுஞ்சுடர்
> நிறம் இருக்கும் படையின்கண் நீக்கமில்
> மறம் இருக்கும் மடந்தையர் கண்ணிணே"
>
> (நகரச்சிறப்பு: 15)

இப்பாடலில் மூன்றும் அடியுள் உள்ள 'நீக்கமில்' என்ற தொடரை எல்லா அடிகளிலும் கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும்.

இவ்வளவு சிறந்த மக்கள் வாழுமிடத்தில் எவ்வளவுவளம் கொழிக்கும்! எத்துணைச் செழுமை தாண்டவமாடும்! செல்வமும் சீரும் மல்கியிருக்கும்! பேரின்ப உலகமாகவே அது விளங்குமல்லவா? அங்கே குறையேது? குற்றமேது? என எண்ணத் தோன்றுகிறதல்லவா? ஆம். ஆனல் அப்படிப் பட்ட வளமார்ந்த நாட்டிலேயும் குறையிருந்தது.

என்ன குறை?

வளமான அயோத்திநகரில் குறைகளே இல்லை என்று எல்லா உலகினரும் முடிவு செய்திருக்கின்றனர். ஐயோ! அயோத்தியில் வாழும் எல்லா மக்களுக்குமே ஒரு பெரிய குறை இருக்கிறதே! இது தெரியவில்லையே! என்ன குறை என்கிறீர்களா? சொல்கிறேன். அரிச்சந்திரன் சுடர்முடி சூடிய நாள்தொட்டு எவ்வகைக் குறையும் யாருக்கும் இல்லை தான். ஆனல்...இந்நகரில் எல்லா மக்களுக்கும் செல்வம் குவிந்து செறிந்துகிடக்கிறது. அனைவரும் தம்மில் இருந்து தம் வளமார் விருந்துணவு உண்டு களிக்கின்றனர். ஆயினும் மக்கள் மனம் அமைதியடையவில்லை. ஓர் ஏக்கம் அவர்களுள்ளத்தை நசுக்குகிறதே! என்னஅது? அந்நகரில் ஒருவரும்! 'இல்லை' என்று வாயால் சொல்லி, எதனையும் கேட்க மாட்டேன் என்கிறார்கள். ஈ என்று இரந்து கேட்க யாருமே இல்லாத அளவு வளம் நிறைந்து வழிகிறது. யாராவது எதையேனும் இரந்தால் அளவுக்குமேல் குவிந்துகிடக்கும் செல்வத்தை—உணவை–பொருளை வாரி வழங்கி உண்டு வாழலாம். அதற்கு வழியே இல்லை. உம். செல்வமிருந்தென்ன பயன்? ஈத்துவக்கும் இன்பம் பெற இயலவில்லையே! எல்லாரும் செல்வராக இருப்பதால் இல்லாதாரே இல்லாத நிலையில் அல்லவா அந்நகர் இருக்கிறது!'—இந்நகரத்தினரின் ஏக்கம் இது! இவ் ஒரு குறைதவிர வேறு எதுவும் இல்லையாம்."

கவிஞர் உள்ளம்கண்ட புரட்சிக்கற்பனை எப்படி? உலகில் இரந்தும் உயிர்வாழ்தல் கூடாது என்ற பொது அற உணர்வு வீரகவிஞர் கற்பனையில் செயல்பட்டுவிட்டது. 'உலகில் ஏழை என்ற கூட்டமே இருக்கக் கூடாது. ஏழை இல்லையே என்ற ஏக்க மட்டுமே இருக்க வேண்டும்' என்ற அறக்கருத்து இன்றைய புத்துலகு போற்றும் கருத்தன்றோ? ஈவோரும் இரப்போரும் இல்லாத நிலையை உருவாக்கிய புதுமைக் கவிஞரின் புரட்சிப் பாட்டு இதோ :

"தொட்டு மன்னன் சுடர்முடி சூடிய
மட்டும் ஏக்கம்அவ் வாணகர்க்கு இல்லை ஊண்
அட்டுஉண் பார் அன்றி ஆதுலர் இன்மையால்
இட்டு உணுக்குறை யென்பதுஓர் ஏக்கமே."

(நகரச் சிறப்பு: 16)

'பிறர்க்கு இட்டு உண்ணுக் குறை ஒன்றே உலகமெங்கும் குறையாக இருக்க வேண்டும்' என்ற கருத்து நலம் மிக விழுமியதல்லவா? பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த வீர கவிஞர் இனைய புதுமைக் கருத்தைப் பழங்கதையினிடை அமைத்து அறிவு விளக்கஞ் செய்து உலகினை வருங்கால வாழ்வுக்கு முன்னேற்பாடு செய்த மாண்பு வியத்தற்குரியதல்லவா?

வளமை வளமை...என்று படித்தோம். ஏழையில்லாத ஏக்கமே இருக்கிறது என உணர்ந்தோம். இவ்வள நகரில் துன்பமே இருக்காது என்றே எண்ணுகிறோம். ஆம். அயோத்தியில் துன்பங்களே கிடையாது. ஆனால் கவிஞரின் இரக்க உள்ளம் அங்குள்ள சில துன்பங்களையும் கூர்ந்து கண்டு, சுவையோடு கூறுகிறது. என்ன துன்பம்?

வயிறார உணவு, பயன்படுத்த அளவற்ற செல்வம் இது இரண்டும் இருந்து விட்டால் அங்கு காமம் செங்கோல் செலுத்துவது இயல்புதானே. அந்நிலையே இங்கும் உளது. எப்போது அந்நகர் மகளிர் கண்கள் நோக்காலேயே கொல்லும் கொலைத் தொழிலைப் பயிலுமாம்! அம்மடவாரின் கண்கள் அறிவிக்கும் எழுதாக்கிளவியான காதற் குறிப்பை உணர்ந்துணர்ந்து காமமிக்க ஆடவர்கள்; அந்தக் காதல் ஏக்கத்தினால் அடைகின்ற அளவு கடந்த துன்பம் அவண் எப்போதும் நீங்குவதே இல்லையாம். அது மட்டுமா? இன்னொரு பெரிய துன்பமும் உண்டு. என்ன? பெண்களின் மிக மிக மெல்லிய இடையின் மென்மை இனைத்தென்று கூறமுடியாத அளவு நுண்ணியது. அவ்விளம் பருவ மகளிர்க்கு இளமையும் உயர்ந்த தோற்றமும் பருத்து வட்டமான இயல்பும் வாய்ந்த இருபெரு மார்பகங்களின் மீக்க சுமையை அந்த மெல்லிடை

பொறுக்க முடியாமல் ஒடிந்து போகும் என்று எண்ணும்படி யாகத் துன்பமும் அங்கு உண்டு. இந்த இருவகைத் துன்பங் களைத் தவிர அந்நாட்டில் வேறு ஒரு துன்பமும் இல்லையாம்!

"கற்றிடுங் கொலைக் கண்கண்டு காமுகர்
முற்றிடும்பையு மோட்டிளங், கொங்கையால்
இற்றிடும் மருங்கு என்னும் இடும்பையும்
மற்றிடும்பையும் மண்டலத்தில் லையால்" (ந. சி: 17)

அழகு, காதல், வளமை, இன்பம் ஆகிய நல்லனவெல்லாம் நிறைந்த அக் கற்பனைவள நாட்டில் அமைவதாகத் தம் வளமார் கற்பனையால் கூறும் நுண்ணிய துன்பங்கள் சுவை யுணர்வுக்கு அரிய விருந்துகளாமன்றோ?

ஆவல், காதல் எனும் உணர்ச்சிகளை ஆறுகவும், அறிவை அணைக்கட்டாகவும் உவமையாக ஆண்டுள்ள கற்பனைத் திறம் வேறொரு பாட்டில் பொலிகிறது. 'கரையை அழிக்கின்ற—முறையை அழிக்கின்ற—காதல் என்ற ஆற்றை அறிவு என்ற கறையால் அடக்க வேண்டும்' என நயமாக வீர கவிஞர் நல்லறிவு ஊட்டுகின்றமை போற்றி உள்ளத்தில் கொள்ள வேண்டிய தொன்றும்:

"கரைஅழி காதல் ஆற்றை அறிவுஎனும் கரைசெய்து ஆற்றி
வரையன புயத்து மன்னன் முனிவரை நோக்கி 'மாதர்க்கு
அரசியை' அடிய னேனுக்கு அணிமணம் புணர்க்க நும்வாய்
உரைஉளது ஆயின் என்மாட்டு உயிர்உளது ஆகும்
என்றான்" (தி. கா. 21)

குழந்தை பெறுவதை நம் நாட்டுப் புலவர்கள் மிகப் போற்றிப் பாடுவது வழக்கம். பிள்ளைப் பேறு வாழ்வில் அடைய வேண்டிய இன்றியமையாப் பேறுகக் கருதுவது நம் நாட்டு மரபு. 'உலகில் பழியற்ற பிள்ளைகளைப் பெறுவது மிக உயர்ந்ததவமாகும்' என்ற நல்ல கருத்தை வீர கவிஞர் கூறுகிறார்:

"மைதிகழ் வாரி சூழும் மாநிலத் தோர்கட்கு எல்லாம்
பெய்தவம் பழி பிறங்காப் பிள்ளையைப் பெறுதல் என்பார்
செய்தவம் அன்று உன் தாதை சனனங்கள் தோறும் செய்த
கைதவம் ஆவி கொள்ளும் களவினில் பயந்த தெல்லாம்"
(தி. கா: 31)

சில கருமிகள் தம்மிடம் உள்ள ஒரு பொருளை; வந்து இரந்து கேட்போர்க்கு 'இல்லை' என்று சொல்லமாட்டார்கள். பல நாட்கள் கேட்பவர் அலையுமாறு, 'நாளை வா; மாலை வா.

இரண்டு நாள் கழித்து வா' என இழுத்தடிப்பர். பல நாட்கள் அலைந்து காலோய்ந்தபின் கேட்டவரே அலுப்பும் சலிப்பு மடைந்து போவார். அவரைக் கண்டால் போதும்; உடனே கருமிகள் ஒளிந்து தலைமறைவர். அதுபோலக் காட்டிலும் சில நிலை உண்டாம். பாலை நிலத்தில் மான்கள் நீர் வேட்கையால் அலைகின்றன. சற்றுத் தொலைவில் நீர்நிலை தோன்றியது. அங்கே ஓடின மான்கள். அங்கேயும் நீர்நிலை இல்லை. இன்னும் சற்று தொலைவில் தோன்றியது. இவ்வாறு ஓடித் தேடி மான்கள் இளைத்து ஓய்ந்தன. இவ்வண்ணம் ஏமாற்றியது கானல் நீர்தான். கானல் நீரை உண்மை நீரென நம்பி அருகில் சென்று சென்று ஏமாந்து மான்கள் ஓயும் இரக்கத் திற்குரிய நிலைக்கு உவமையாக ஈயாதாரின் இல்லையென்னுது அலைய வைக்கும் கொடுமையை ஆண்டுள்ளார் வீர கவிஞர். இவ்வுவமை வாயிலாக ஈயாதாரின் இழிதகைமையையும், இரப்போரின் இரங்கத்தக்க நிலையினையும் விளக்கும், இரப் போர் உளங்குளிர ஈவதே நன்று எனவும். அவ்வாறு ஈய இயலாதென்ருல் 'இல்லை'யென்று உடனே கூறி அவர்கள் அலைந்து அல்லல்படாமல் தடுப்பது கடமை எனவும் கருத்துரை வழங்கியுள்ளார் கவிஞர்.

சிவைப்புனல் எனக் கருதி வற்றிய துவட்சி அதனல்

" நிரப்புறு தவிப்பினை ஒழித்திட மனத்தினினிணைத்து
மையெல்லாம்
இரப்பவரை நித்தலு நடத்தியும்ஓர் அற்பமும் இரக்க
மிலர்பால்
பரப்பவரை யொத்தன சுரப்பவரை ஒத்தன பசாசரதமே "
(தி. கா: 107)

வறியவர்களைப் பல்வகை வேலைவாங்கி நசுக்கித் துன் புறுத்துவது வலியவரின் நாட்கடனுக இருத்தலைக் கண்ட வீர கவிஞர் அவ் எளியவர் நிலைக்கு இரக்கம் கொண்டார். **'புதுமையின் உள்ளம் இரக்கத்தின் கோயில்!'**

" மிடித்தவர்களைப் பொருள்மிகுந்தவர் வினைத்தொழில்
விளைப்ப தெனவே
கொடிப்படர் பொருப்பென விடைக்கிடர் விளைத்தன
கும்ப வழகும்
தடித்தினடி நிற்கும் இரதத்தைநிகர் பொலற்கொடி
தடத்தினழகும்
பொடித்தெழு வெயர்த்திரு முகத்தழகு நின்னெளி
பொழிந்தொழுகவே." (சி. 114)

மார்பகம் நாளுக்கு நாள் பருத்து நாளுக்கு நாள் மெலிந்து சிறுக்கும் இடைக்குத் துன்பம் விளைத்தமைக்கு உவமையாக வறியோரை மேல் மேல் நெருங்கிச் சுமையாக வேலை வாங்கும் செல்வர் நிலையை ஆண்ட கவிஞரின் புலமை நலம் போற்றற் குரியதாம். இனைய புதுமைச் சீர்திருத்தக் கருத்து வீர கவி ஞரின் தனி யியல்புகளை உணர்த்தும் கருவியாகும்.

விருந்தினரை வரவேற்க வேண்டிய முறையையும் வீர கவிஞர் நன்கு விளக்கியுள்ளார்.

'விருந்தினர் வருவதைப் பார்த்ததும், இருக்கையி னின்றும் எழுந்து, எதிர் நோக்கிச் சென்று இன்முகங் காட்டி. நன்மொழி கூறி வரவேற்க வேண்டும்'-எளிய நடைமுறைக்கும் வீரகவிஞர் சிறப்பளித்துக் குறிப்புதரும் நுணுக்கம் கருதுதற் குரியதாம்.

" தருவிருந்த கரனிருந்த சபைகொண்ட மண்டபத்திலே
மருகன்வந்து புகுதலும்தன் மனமகிழ்ந்து மதிதயன்
அருகிருந்த அரசரோடும் ஆதனத்திருந்து போய்
இருகரங்கள் இறுகநண்பின் எதிர்நடந்து தழுவினன்."
(தி: 157)

ஒரு பொருளை மற்றவர்க்குக் கொடுக்க வேண்டுமென்று ஆவல் கொண்டாலும், அப்பொருளைப் பெற ஒருவர் (இரவலர்) இல்லாததால் 'ஈகை' 'கொடை' என்பன இல்லாமல் போய் விடுகிறது. இந் நிலைதான் பேரின்ப உலக வாழ்வு எனக் கற்பனை செய்கிறார் வீரகவிஞர், கலைஞர்களும் தம் கலைத் திறமைக்காகப் பாராட்டப் பெற்று பரிசு பெற விரும் பாமல்; சுவைஞரின் உள்ளத்து அன்பையே பரிசிலாகப் பெற விரும்பும் நிலையமைந்த இடமே பேரின்ப உலகம் என்பது வீரகவிஞர் கொள்கை.

" நீடும் ஆசையின் ஈவது எண்ணுறு நெஞ்சினர் பலர்
ஆயினும்
கூடும் ஆசையி னேடு முற்றது கொள்ளுவார் அவன்
இன்மையால்
பாடும் மாதர் யாழினேடு பயிற்று மாதர் அரங்கி னின்று
ஆடு மாதர் தினம் பெறும் கொடை அண்டவாணர்கள்
நெஞ்சமே!" (இ,கா. 15)

"நேர்மை முறை ஒன்றே உலகில் நிலையானது, அதை இழத்தலே மிகப் பெரிய இழப்பு" என்ற உயர்ந்த கருத்தை வீரகவிஞர் காப்பியத் தலைவி சந்திரவதி வாயிலாக உணர்த்துகிறார்.

"அனையவை அமைச்சன் கூற, அரசனை அரிவை போற்றி
"எனையிழந் தாலும் மன்ன! என்வயிற் றுதித்த மைந்தன்
தனையிழந் தாலும் இந்தத் தலம்இழந் தாலும் வெம்போர்
முனையிழந் தாலும் நீதிமுறை ஒன்றும் இழவேல்" என்றார்"
(வே. கா: 97)

"இவ்வுலகில் மனைவியை யிழக்க நேர்ந்தாலும், மக்கட் செல்வங்களை இழக்க நேர்ந்தாலும்; பொன்—பொருள்—மண் ஆகிய அனைத்துவகைச் செல்வ நலங்களை இழக்க நேர்ந் தாலும்; வெற்றிகளை இழக்க நேர்ந்தாலும் அறமுறையை—நேர்மையை—மட்டும் இழக்கவே இழக்கக் கூடாது. அறம்—நேர்மைமுறை—என்ற ஒன்றுக்காக ஏனையவற்றை யெல்லாம் இழந்துவிடலாம்" என்பது வீரகவிஞரின் அரிய அறிவுரை.

இப்பாடலில் கற்போர் உளங்கொளக் கருத்தைப் பதிக்கும் கவிஞர் திறம் நனிபோற்றற் குரியது.

பெண்களின் காதல் இருக்கிறதே; அது ஒரு விளங்காத புதிர்க் கொள்கைதான். எத்தனையோ புலவர்கள், கலைஞர்கள் பெண்ணுள்ளத்தின் பெருங் காதலைப்பற்றிப் பாடிப் பாடி இன்னும் முடிவு கட்ட இயலாமல் அயர்கிறார்கள், வீரகவிஞர் பெண் காதலைப்பற்றி உயரிய கருத்தை உருவாக்கிக் கொடுக்கிறார்.

"பெண்களின் காதல் மிகமிகக் கனமானதாம்! அளவுக்கு மிகுந்த வெப்பமானதாம். பெண்டிர் தம் உள்ளத்தில் எந்த ஆடவனை அடைய முடிவு செய்திருக்கிறார்களோ அவனை அடைந்து இன்புற்றாலன்றி வேறு எத்தகு உயர்ந்த ஆடவனை அடைந்தாலும் ஆறுதலடைய மாட்டார்கள்; இன்பமும் பெறமாட்டார்கள்"

—அரிய உளவியல் கோட்பாட்டைப் பாடலின் கவிதைச் சுவைமிக உருக்கமாகவும், உணர்வுப் பயனோடும் வீர கவிஞர் கூறுகின்றார்.

"கனத்தவெங் காதலார்க்குக் கணித்தவரால் அலாது அவ்
இனத்தவர் ஒருவராலே இன்பம் உண்டாக வற்றோ?
மனத்துளே குறித்து வந்த மணிக்குடை வழங்காயேல் அம்
தனத்தினைத் தழுவி இன்பம் தருதி என்று அவர்கள்
சொன்னார்." (சூ. கா: 34)

(தொடரும்)

360–ஆம் பக்கத் தொடர்ச்சி :

'ஒரு பொருளைப் பெற வேண்டுமென்று விரும்பினால்; அப்பொருள் கிடைக்கும் இடத்தில் கேட்க வேண்டும். ஒருவரிடம் ஒன்றைப் பெற வேண்டுமென்றால் அதைக் கொடுக்கக் கூடியவராக — கொடுக்க விருப்பமுடையவராக — இருக்க வேண்டும். அப்போது அதைக் கேட்டுப் பெறுவது எளிது. கொடாதவர்களிடமும், கிட்டாதவிடத்தும் ஒன்றைக் கேட்பதால் என்ன பயன்? ஏமாற்றமும் ஏக்கமும்தான் விளையும்.' என்ற கருத்தை விளக்கி, 'கேட்பன அறிந்த நமக்குக் கிடைப்பன உணர்ந்து கேளீர்!' என அறிவுறுத்துகின்றார் வீர கவிஞர்.

வாட்பொரு கண்ணார் கூறமந்திரத் தலைவன் சொல்வான்
வேட்பன வில்லை யென்னு மெய்ந்நெறி வேந்தன் தன்பாற்
கேட்பன அறிந்து உமக்குக் கிடைப்பன உணர்ந்து கேளீர்!
சேட்பட நில்லும் என்னத் தெரிவையர் செப்ப லுற்றார்''
(சூ. கா.: 35)

'கொடுக்கத் தக்கவைகளையே கொடுக்க வேண்டும். கொடுக்கத் தகாதவற்றைக் கொடுக்கலாகாது. விடத்தக்கவற்றையே விடவேண்டும். விடத்தாகதவற்றை விட்டுவிடலாகாது' என்றும், 'கேட்கத் தகுதியுடையவற்றையே தருபவர்களிடம் கேட்டுப் பெறுவது அறிவுடைமை' என்றும் கருத்துரை வழங்குகிறார் கவிஞர் பெருமான்.

"கொடுப்பன கொடுப்பதல் லாற் கொடாதன கொடுக்க
மாட்டார்
விடுப்பன விடுப்பர் என்றும் விடாதன விடவு மாட்டார்
தொடுப்பன தொடுத்து நம்மால் சொல்வன சொல்லி
நுங்கட்கு
அடுப்பன கொண்மின்; அல்லால், அகன்மின்! என்று
அமைச்சன் சொன்னான்" (சூ. கா: 37)

'சிறியவர்கள் குற்றங்களை அறியாத இயல்பால் செய்வது இயல்பாகும். அதைப் பெரியோர்கள் பொறுத்தருள்வது அவர்கட்குக் கடமையாகும், அவ்வாறு பெரியோர் எனப் படுவர்கள் சிறியோர் பிழையைப் பொறுக்காவிடில் அஃதவர்க்கு அறமுமாகாது; முறையுமன்று என்ற கருத்தை நன்கு வற்புறுத்துகிறார்.

"சிறியரானவர் தமக்கு உரியவே அல்லவோ தீமை;
நன்னூல்
அறிஞரானவர் தமக்கு அல்லவோ பொறை? பிறர்க்கு
ஆகுமோதான்?
நெறியிலா வினையினேன் ஒருவனைப் பொருளதா நீ
முனிந்தால்
பொறையும் நின்அருளும் என் அளவிலோ இல வெனப்
போனது என்றான்" (சூ. கா. 52)

"சிறுத்தவர்கள் அறியாமற் செய்த பிழை அத்தனையுஞ் செவ்வியோய்,நீ
பொறுத்தருளாய் ஆமாகில் பொறை என்னும்? முறை என்னும்? புலமை என்னும்?
ஒறுத்திடினும் வெறுத்திடினும் உனக்கு அளித்த அரசுஉரிமை ஒருகாலத்து
மறுத்து இனியான் வாங்கேன் என்று எடுத்துரைத்தான் மன்னன் முனிவாட்டம் உற்றான்" (ந. நீ. கா: 20)

கொஞ்சிப் பேசுகின்ற அறியாத குழந்தையின் மழலை மொழியிலே இலக்கணப் பிழை, ஒலிப் பிழை, பொருட் பிழை, சொற் பிழை, அமைப்புப் பிழை முதலிய குற்றங்கள் நிறைய இருக்கும். அதனால் வஞ்சனை மிகுந்த நெஞ்சத்தோடு அக் குழந்தையின் தாய், குற்றங்களுக்குத் தண்டனையாகத் தன் முலைப்பாலிலேயே நஞ்சைக் கலந்து கொடுத்தால்; அதை அறிந்து; அக் கொடுமையை விலக்குகின்ற நல்ல உள்ளமுடையவர்கள் இவ்வுலகில் இருக்கின்றார்களோ? என அரிச்சந்திரன் வாய்மொழியாகக் கவிஞர் கேட்கிறார்.

இக்கருத்தின் அச்சச் சுவை கலந்த கற்பனை வளமும், கவியழகும் தனித்திறனுடையதாக உள்ளது. இக்கற்பனையின் நுட்பப் பொருள்கள் நனி பலவாகக் காணப்படுகின்றன. அந் நுண் பொருள்கள் அனைத்தையும் கணக்கிட்டு எல்லைகட்டி விளக்கிவிட முடியாதுதான். இப்பாடலைக் கற்போரின் நுண்ணறிவு, உணர்வு வளம் ஆகியவற்றுக்கேற்பவே அதன் நுட்பப் பொருள் நயங்களை நுணுகி ஆராய்ந்து உணர வேண்டும்.

பொருள் வளமிக்க அவ்வரிய பாட்டு இது :

"கொஞ்சிப் பேசுங் குழவிசொற் குற்றந்தான்
வஞ்சித்து அன்னை வனமுலைப் பாலினில்
நஞ்சிட்டால் அதை நாடி விலக்கும்நல்
நெஞ்சத்தார் உளரோ இந் நிலத்திலே" (சூ: கா: 71)

குழந்தையின் பேச்சில் குற்றங்குறை இருப்பது இயல்பே. இதை அறியாத அன்னை எவரும் இருக்க மாட்டார். அதிலும், தான் பெற்ற குழந்தையின் மழலைமொழியைக் கேட்டு அகம் மகிழ்வாளே தவிரச் சினங்கொள்ள மாட்டாள். அத்தகையவளே கொடுநெஞ்சம் கொண்டு முலைப்பாலில் நஞ்சு கலந்தால்...! அடடா! அந்நிலை எத்தகு கொடிது! தாய் நஞ்சிடுவதை அறிந்தும் நல்லோர் விலக்காமல் இருப்பார்களா? பெற்றவள் என்பதற்காக 'எப்படியாவது போகட்டும்' என்று

விட்டுவிட மாட்டார்கள். குழந்தையின் உயிரைக் காப்பாற்று வதற்காகத் தாயை விலக்குவர். விலக்கியே ஆக வேண்டும். அதுதான் நல்லோர்க்கழகு என்ற எண்ண ஓட்டங்களையெல் லாம் பாட்டு உண்டாக்குகிறது.

அரிச்சந்திரனின் வாய்வழியாகவே பல அருங் கருத்துக் களை வீர கவிஞர் வழங்கித் தன் கதைத் தலைவனைக் 'கருத்துக் களஞ்சியமாக' ஆக்கியுள்ளார்.

பிறர்மனை நயத்தல் பெருங் குற்றங்களுள் மிகப்பெருங் குற்றம் என்ற கருத்தை மிக ஆற்றலோடு வற்புறுத்துகிறார்.

அரிச்சந்திரன் கௌசிகனுக்குப் பெருஞ் செல்வம் கொடுப்பதாக வாக்குறுதியளித்திருந்தான். எப்பிழையும் செய்யலாகாது அவர்க்கென முடிவு செய்திருந்தான். இவ்விரு கோட்பாட்டில் தவறமாட்டேன் என உறுதிமொழி கூறு கிறான்: "கௌசிகனுக்குப் பிழைகள் செய்தால்; அவனுக் குரிய அரிய செல்வத்தைக் கொடுப்பேன் என்ற சொல் தவறி னால் அச்செல்வத்தைக் கொடுக்காது போனால், அப்போது எனக்கு எத்தகைய பழி உண்டாக வேண்டும் தெரியுமா? கற்பறத்தை மனமார நம்பிக் கடைப்பிடித்தொழுகும் ஒரு பெண், தன் கணவனுக்கு உயரிய நல்ல புகழும்; மாற்றார்முன் ஏறுபோற் பீடுநடையும் உண்டாகுமாறு அழகாக, அருமை யாக இல்லறம் ஆற்றுகிறாள். அத்தகைய பிற ஆடவர்க்குரிய நன்-மனைவியைத் தகாதமுறையில் விரும்பி; இல்லறமுறைக்கு மாறாக அறந்தவறி வழுவோடு நடப்பவன் அடையும் குற்றத் தைச் செய்தவன் ஆவேன்"—அரிச்சந்திரன் சூளுரை எப்படி!

"நிற்பிழைத்திடின் நினக்குயான் அருநிதி அளிக்கும்
சொற்பிழைத்திடிற் சூள்உறவு ஏதுஎனில், சொல்வல்
கற்பிழைத்த நற்சொற் பரதாரத்தைக் கருதி
இற்பிழைத்தவன் ஆவன் இருநிதி கொடேனேல்!"

(சூ. கா: 105)

அரிச்சந்திரன் வாயிலாக மேலும் அவன் கைக்கொண்டு ஒழுகிய உயர் பண்புகளை உலகுக்கு உணர்த்துகிறார் வீர கவிஞர். இதனால் தன் கருத்து செயலொழுக்கத்தில் நிலை பெற வேண்டுமென்ற நோக்கம் கொண்டவர் கவிஞர் என்பதை அறியலாம்.

"மெய்மையையே பேசுதலும், மேன்மையான செயல் களைத் தவறாமல் ஆற்றுதலும் உயர்ந்த உள்ளமுடைய மாந்தர்க்கு அழகாகும். அதைத் தவிர்த்து மைதீட்டிய கண்

களைக் கொண்ட விலை மகளிரைச் சேர்தலும், பிறர்க்கு ஒன்றை ஈயவிரும்பாது அதன் காரணமாகப் பொய் பேசுதலும் அற மற்ற செயல்களைச் செய்தலும் புகழ் தராது'' எனத் தொகுத்துக் கூறுகிறார் மெய்யறிவுக் கருத்துக்களை.

''கைபிடித்தலும் முனிவனைக் கால்பிடித்து இறைவன்
மெய்பிடித்தலும், மிக்கவை செய்தலும் அல்லால்
மைபிடித்த கண்பரத்தையர்ப் புணர்தலும் வழங்காய்
பொய்பிடித்தலும் அறன்அல செய்தலும் புகழோ?''

சூ. கா: (125)

பரத்தையரை மிக இழிவாகக் கருதுகிறார் வீர கவிஞர் என்பதை, 'மைபிடித்த கண் பரத்தையர்' என்ற தொடர் குறிக்கிறது. நல்ல மகளிர் மைபூசினல் அதை 'மையுண்ட கண்' என்பது புலவர் வழக்கு. இவர் எள்ளுநங் குறிப்புணர்ச்சி யோடு 'மைபிடித்த கண்' என்பதை உன்ன வேண்டும்.

அரிச்சந்திரன் கதையைப் பாடத் துவங்கியபின் வீர கவிஞர் அறத்தைப் பற்றி ஒரு தனி ஆராய்ச்சியே நிகழ்த்தி யிருக்கிறார்.

ஆற்றல் வாய்ந்தவர்கள் அறவழியை விட்டு, மறத்தை நம்பி அதனைக் கடைப்பிடித்துச் செல்வாக்கு பெற்று உயர்ந்த நிலையடைந்தால் மக்கள் அதைக் கண்டு 'மறமே நல்லது' என்கின்றனர்.

'ஆற்றல் குறைந்தோர் வளர்வதற்கு மறமே நல்லதுணை' என மக்கள் நம்பமுற்படுகின்றனர். இது உண்மையா? மறம் நல்லது தானு?

வேறு பலர் 'அறமே நல்லது' என்கின்றனர்.

அறம் நல்லது எனக் கூறுவது உண்மையானல், நல்லவர் களுக்கும் கெட்டவர்களுக்கும் மற்றவர்கட்கும் அறமானது ஒரே தன்மையாக–நல்லதாகவே–இருக்க வேண்டும் அல்லவா? ஆனல், அறம் ஒருசாரர்க்கு நன்மையும், ஒரு சாரர்க்குத் தீமையும் பயப்பது ஏன்? அறம் செய்தால் நன்மைதருவது உண்மையானல் அறத்தை நம்பிக் கடைப்பிடித்து வாழ்ந்த அரிச்சந்திரனுக்குத் துன்பம் விளைவித்தது ஏன்?'...என்று வீரகவிஞர் எண்ணுகிறார். அதை நேரேதன் கூற்றில் (கவிக் கூற்று) கூருமல், பொது மக்களின் எண்ணக் குமுறலாக' வெளியிட்டிருக்கிறார்.

இங்கு வீரகவிஞரின் நுண்ணறிவு மிக அழகாகச் செயற் பட்டிருப்பதை எப்படிப் பாராட்டுவது?

புலவர்கள் சில கருத்துக்களைத் தாமே கூறிவிடுவர் அழுத்தந்திருத்தமாக! ஆயின், சில கொள்கைகளைத் தன் கதைமாந்தரின் வாய்மொழி—செயல்—வழியாக வெளியிடுவர். சில கருத்துக்களைத் தனியொருவர் வாயிலாக வெளியிடாமல் பலர் வாயிலாக முழக்குவர்.

கவிஞன் தன் வாழ்வில் நம்பிக்கடைப் பிடித்தொழுகும் கருத்தைத் தானே நேர்முகமாகத் திட்டவட்டமாகக் கூறி விடுவான். தன் 'துய்ப்படைவின்' விளைவாக அக்கருத்து அமைவதால் நேரே உலகிற்கு அக்கருத்தை வழங்குவான். தான் நம்பும் நல்ல கொள்கையைத்தானே கூறவேண்டு மென்ற உரிமையும், நேர்மையான ஆவலுங் கூட இதற்கு அடிப்படையாம்.

கதைமாந்தர் வாயிலாக வெளியிடப்படும் கருத்து கவிஞனின் நல்ல சூழ்ச்சித் திட்டத்தோடு கூடியது. எளிய அறிவினர்க்கும், அறிவுரை—கருத்துரை ஆகியவற்றைத் தனியாகக் கேட்டுணர விரும்பாதவர்க்கும் இக் கதைமாந்தர் கூற்றாகக் கருத்தைக் கூறிக் கட்டாயமாக உணர்த்தி விடுகிறான். பொழுதுபோக்க விரும்புபவரின் உள்ளத்தில் கூட நல்ல கருத்தைப் பதியவைக்கப் புலவனின் திறமான சூழ்ச்சி இது.

இது ஒரு புறமிருக்க, கவிஞன் நம்பாத கருத்தை, கதைக் காக வெளியிட வேண்டியிருந்தால் அதைக் 'கதைமாந்தர்' வாயிலாக வெளியிடுவான். இவ்வகையில் அமையும் நம்பாத கருத்தைப் புலவன் பின்னே மறுத்தோ, திருத்தியோ தான் நம்பும் கருத்தை உணர்த்தியோ செம்மை செய்துவிடுவான்.

இனி, பலர் வாயிலாகக் கருத்தைக் கூறுவதேன் எனில், 'ஆராய்ச்சிக்குரிய கருத்தையோ, முரணான கோட்பாடுகளை யோ, தெளிவிக்க வியலாத கொள்கை—நிகழ்வுகளையோ, ஏதேனும் ஒரு காரணத்தால் தான் ஏலாத கருத்தையோ பல வாயிலாக வெளியிடுகிறான்.

இம் மூவகை முறையில் மூன்றும் முறையை இவண் வீர கவிஞர் கையாண்டு 'அறம்பற்றிய ஆய்வை'க் குறிக்கிறார்.

"வல்லார்க்கும் மாட்டார்க்கும் மறமே நன்றென்றுரைப்பார்;
மறம் நன்றாமோ?
அல்லார்க்குங் குழல்மடவீர்! அறமேநன்றென்றுரைப்பார்;
அதுநன்றாகின்
நல்லார்க்கும் தீயோர்க்கும் எல்லார்க்கும் ஒருமையினால்
நடவாது என்னோ?
எல்லார்க்கும் உளதாகில் எம்கோனுக்கு இலையானது"

யாப்பாலும் சொல்லாட்சியாலும் பொருள்வளத்தாலும் இப்பாட்டு தனிசிறப்பு வாய்ந்து விளங்குகிறது. இப்பாட்டின் அழகைச் சுவைத்துவந்து வடலூர் இராமலிங்க அடிகளார் தாமும் அப்பாட்டமைப்பில் சில திரு அருட்பா பாடியுள்ளார்.

"கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே!
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே!
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே!
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே!
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே!
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே!
எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற சிவமே!
என்னரசே, யான்புகலும் இசையுமணிந் தருளே!".

(அருட்பா)

நட்புக்கு நல்ல இலக்கணம் வகுத்துரைக்கிறார் வீர கவிஞர். "வாழ்க்கை இன்பமாகவும் செல்வ நலனும் செல் வாக்கும் அமைந்து விளங்கும் காலத்திலும், தாழ்மையடையக் கூடிய வகையில் கொடிய துன்பம் சூழ்ந்த காலத்திலும்; மற்றவர்களால் பல தீமைகள் தொடர்ந்து அணுகி அடர்ந்த காலத்திலும் நாம் நட்பாடிய நண்பரை விடாது நட்பு செய்வது தான் உயரிய நண்பர்க்கழகு" என்ற அரிய கருத்தை அரிச் சந்திரனின் அமைச்சன் அரியகீர்த்தி வாழ்க்கை வழியும் வாய் மொழி வழியும் வீரகவிஞர் நிலைநாட்டுகிறார்.

"வாழ்வினை வளர்ந்த பொழுது என்னின் மிக வாழ்ந்தாய்!
தாழ்வினை நிகழ்ந்த பொழுது என்றனொடு தாழ்ந்தாய்!
சூழ்வினை நமைக்கடிது சுற்றின் அவை யெல்லாம்
ஊழ்வினை எனச்சொலி உடன்கொடு நடந்தான்!"

(ந. நீ. கா: 31)

'அறத்தை நம்பி யொழுகும் போது 'சாவு' தான் கிட்டும், என்ற நிலை வாய்ந்தால் என்ன செய்வது? என்ற சிக்கலான வினவை உண்டாக்கி, அதற்கு அழகாகவும் அருமையாகவும் வீரகவிஞர் ஆண்மையோடு விடை பகர்கிறார்.

'குடும்பத்தோடு அறத்தையே நம்பி நற்றுணையாகப்பற்றி ஒழுகி, அதன் காரணமாகவே சாவது மிகமிக நல்லது!" என்பதே வீரகவிஞர் விடை! பெயருக்கேற்ற உள்ளம் கவிஞர்க்கு இருக்கிறதன்றோ? அறக் கவிஞரின் நல்ல மறவுணர்ச்சி பாட்டில் அழகாக ஒலிக்கிறது.

"சிறப்பமை சேயொடு தேவியும் மன்னும்
உறத் தழுவித்தம் உணர்ச்சி விடாமல்
அறத்தினை நற்றுணை யாக நினைத்தே
இறத்தல் எமக்கு இனிது என்ன இருந்தார்"

(ந. நீ. கா: 71)

'உணர்ச்சி விடாமல் அறத்தினை நற்றுணையாக நினைத்தல் வேண்டும். அதனால் இறத்தலும் இனிதே' என்ற கவிஞரின் பொன் மொழி நனிபோற்றுதற்குரியது. 'பொன்றுங்கால் பொன்றாத் துணை அறமே' என வள்ளுவரும் இக்கருத்தை வற்புறுத்துகிறார். இக்காலத்தினர் இந்நல்ல கருத்தை எந்த அளவுக்கு மதிக்கின்றனர்?...ஆயின் 'அறம் காக்கும். அறம் வெல்லும்; அறம் வாழும். அறமே நிலைக்கும்' என்ற உண்மை பொய்யன்று; மெய்யே. இதனை உணராது தான் இன்றைய பூசல், போராட்டங்கட்கெல்லாம் தலையாய காரணம்.

வேறொரு அரிய கருத்தை விளக்குகிறார் வீரகவிஞர். 'காதல் மிக மிகப் பொல்லாதது. பெண்ணாவல் தணியாதது. தாமே உணர்ந்து திருந்தினாலன்றித் திருந்துதற்கேற்றதன்று' என உணர்த்துகிறார்.

'கண் இல்லாதது காமநோய். இரக்கம் இல்லாதது காம நோய். இந்நோய் உள்ளத்தில் வளர்ந்தால் வேறு எந்த எண்ணமும் தோன்றாது. தானே உள்ளமெல்லாம் நிரம்பி நிறைந்து வழியும். உயிரைக்கூட ஆக்காமம் அழித்துவிடும். காமம் மிகுந்தவர்கள் அவ்வுணர்ச்சியைக் கட்டுப்படுத்தி, அடக்கியாள முடியாத தன்மையால் இன்ன இடமென்றும் பாராமல் எங்கும் துன்பத்துக் கிரையாகித் துடிப்பார்கள். மண்ணாவல், பொருளாவல், பெண்ணாவல் என்ற மூன்று பேரா வலும் ஒருவனுக்கு உண்டானால் அதை அறிவுரை கூறி அடக்க முடியாது. அத்தகையவன் ஆவலைக் கையால் பற்றித் தடுத்து விலக்கிவிட முடியாது. இவ்வாவல்களைத் தாங்களாகவே நீக்கிக் கொள்ள வேண்டுமே தவிர; பிறர் அறிவுறுத்தியோ, முயன்றோ களைதல் அரிது." என விளக்கமாக அறிவுறுத்தி யுள்ளார் வீரகவிஞர்.

'காமத்துக்குக் கண்ணில்லை' என்ற பழமொழிக் கருத்தும் **வீரகவிஞர் கருத்தையே உணர்த்துகிறது.**

தானே உண்டாகக் கூடிய மண், பெண், பொன் அவாக் கள் தானே நீங்க வேண்டும். அது இழுத்த வழியெல்லாம் ஓடி, இடர்ப்பட்டு உணர்ந்தே திருந்த வேண்டும்." எண்ணிப் பார்க்க வேண்டிய நுண்ணிய கருத்தைக் கவிஞர் மொழியால் சுவைப்போம்.

"கண்இலாத மதனப் பிணி கருத்திடை பெருத்திடின் மனத்து
எண்இலாது உயிர் இறுத்திடும் இடத்தினும் இடுக்கண்
உறுவார்
மண்ணில் ஆசையும் நிதிப் பெருவளத் தினிடைவைத்த
மனமும்
பெண்ணில் ஆசையும் ஒருத்தர் கைபிடித்து விடுதற்கு
உரியதோ?" (ந. நீ. கா: 123)

"இரந்து கேட்டவர்களுக்கு ஈவோர் கொடுப்பதும், ஒன்றைக் கொடுக்காமலிருப்பதும் இடத்தை ஆராய்ந்தும், தன்மை நோக்கித் தெளிந்தும் செய்ய வேண்டும்."

"ஒரு தொழிலைச் செய்ய முற்படுவதும், செய்யாமல் விட்டு விடுவதும் அத்தொழிலால் விளையும் நல்லாக்கத்தையும், கேட்டினையும் அறிந்தே செய்தல் வேண்டும். எதிர் காலத்தில் நிகழப் போவதை முன்னதாக உய்த்தறிந்தும், செயல் ஒன்றைச் செய்வதால் தீமையும் வரும்; உள்ள தீமை நீங்கவும் பெறும். என்று இத்தனையும் தெளிந்து அதற்குத் தக்கவாறு நடக்க வேண்டும். அப்படி ஒழுகுபவர் துன்பமோ, கேடோ அடையமாட்டார்கள்.

"இடுதலும் தவிர்தலும் இடம்அறிந்து இயல்பு அறிந்து
ஒருதரம்
விடுதலும் தொடுதலும் வினையறிந்து விளைவு அறிந்து
அடுதலும் படுதலும் அளவுஅறிந்து அடைவுஅறிந்து
செயலால்
கெடுதல் உண்டு இறுதல் உண்டு அவைஅறிந்து
உணர்தலில் கெடுவாரோ?" (ந. நீ. கா: 125)

'நல்ல நெறியில் நடப்பவர்களையும், கற்புள்ள பெண்டிரையும் தீயும் சுடாது.' எனக் கற்பனை வளத்தோடு கூறுகிறார். நல்லொழுக்கத்தையும், மகளிர் கற்பையும் வீரகவிஞர் எவ்வளவு காதலிக்கிறார்; எவ்வளவு அழுத்தமாக விரும்பி மதிக்கிறார்; எவ்வளவு ஆர்வமாகப் போற்றுகிறார் என்பதையே மிகக் கற்பனையாகக் கூறும் இப்பாட்டு தெளிவிக்கிறது:

"கற்பினில் மிக்கவள் கன்னி; நன்னெறிப்
பொற்பினன் மன்னன்; யான் சுடவும் போதிலேன்
வெற்பினின்று அருந்தவ வெளி அடக்கிநின்
சொற்படி மறுக்கிலேன்; சுடுவன் யான்" (ந. நீ. கா; 136)

காப்பியத் தலைவி சந்திரவதி வாய்மொழியாகப் பல அருங் கருத்துக்களை வரன் முறையாக வீரகவிஞர் தொகுத்துரைக்கிறார்:

"மறைவழி கடந்தே மாகில் வரும்விருந்து இகந்தே மாகில்
முறைவழி செய்யே மாகில் மூப்பரை இகழ்ந்தே மாகில்
பிறர்மனை நயந்தே மாகில் பிறர்மனம் வைத்தே மாகில்
குறைசில செய்தே மாகில் 'கொல்' எனக் கனலில்
பாய்ந்தாள்." (ந. நீ. கா: 151)

இது மிக அருமையான பாட்டு. படித்துப் படித்து உள்ளங் கொள்ளத் தக்க அழகிய பாட்டு. கருத்து நலமும், ஓசை வளமும், மொழியமைப்பமைதியும் கனிந்து அமிழ் தொழுகும் அழகின்பப் பாட்டாக யாத்துள்ளார் வீரகவிஞர்.

"அறவழியைக் கடக்கக் கூடாது. வீடு தேடி வரும் விருந்தினரை இகழாமல், புறக்கணிக்காமல் மதித்துப் போற்றி உதவ வேண்டும். நேர்மை முறையில் நடுநிலையோடு ஒழுக வேண்டும். முதியோரை இகழாமல் மதித்து வாழ வேண்டும். பிறர் மனைநயக்கும் குற்றத்தைச் செய்தல் கூடாது. பிறர் பொருள்பால் வீணவல் வைத்தல் ஆகாது. வேறு எவ்வகைக் குற்றமும் செய்யக் கூடாது." இவ்வாறு செய்தால் அவர் களைத் துன்பம் தாக்கும். இக்குறைகளில்லாமல் வாழ் வோரைத் துன்பம் தொடாது. என்பது கவிஞரின் கருத்து.

இக் கவிதையில் நுண்ணிய நயம் ஒன்றை மிக ஒட்ப மாகக் கவிஞர் அமைத்துள்ளார். 'பிறர்மனை நயந்தேமாகில்' என்ற பாடற்றொடரே ஆய்வுக்குரியது.

இப்பாடல் சந்திரவதி கூற்று. (அதாவது பெண் பேசு வது.) இதில் 'பிறர் மனை நயத்தல்' எப்படி இடம் பெறும்? பிறர் மனை நயத்தல் பெரிதும் ஆடவர் புரியும் மறச் செயல். எவ்வாறு பெண் இவ்வாறு கூற முடியும்? என்ற ஐயம் உண்டாகிறதன்றோ?

பாடலைக் கூர்ந்து ஆராய வேண்டும். சந்திரவதியின் பேச்சு தன்மையாகமட்டும் அமையாமல் அரிச்சந்திரனையும் தன்பாற் சேர்த்தே பேசுவதை உணரலாம். தன்மைப்பன்மை யாக வினைச் சொற்கள் அமைவதை நோக்க வேண்டும். 'கண வனையும் தன்னோடு சேர்த்தே இச்சூளுரையை'க் கூறுகிறாள் சந்திரவதி. இம்முறை மிக அழகியது; அரியது. ஆம். தன் கணவனின் கற்புடைமையில் சந்திரவதிக்கு எத்துணை அழுத்த மான நம்பிக்கை இருக்கிறது என்பதைப் பாட்டு மெய்ப்பிக் கிறது. 'கணவன் குற்றம் செய்தாலும் நான் தண்டனை ஏற்றுக் கொள்கிறேன்' எனத் தானே முன்வரும் பெண்மையின் வீறுள்ளமும் கற்புச் செறிவும் துணிவும் கண்டு வியக்கிறோம். நுண்ணிய உணர்ச்சி நலங்களைச் செறித்துக் காப்பிய அழகை வளர்க்கும் புலமைத் திறம் கண்டு போற்றுகிறோம் கவிஞரை.

ஒருவேளை கணவன் குற்றம் செய்திருப்பினும் அதற்குரிய தண்டனையையும் தானே ஏற்றுக்கொள்ளத் துணியும் கற்பரசியான சந்திரவதி பண்போவியத்தின் உள்ளத்திட்பம் நம்மைத் திகைப்பில் ஆழ்த்துகிறது.

''ஒரு மனைவியின் அறம் கணவனைத் தொழுவதே. பெண்ணின் வழிபாட்டுக்குரியவன் கணவன் ஒருவனே''—இது வீர கவிஞரின் கொள்கை. இவ்வொழுக்கத்தைக் கடைப் பிடிக்கிருள் சந்திரவதி. 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை''. என்ற குறள் இவண் ஒப்பு நோக்கத் தக்கது.

அரிச்சந்திரன், சந்திரவதியைக் கொலை செய்ய முற்படுகிறான். அவள் இறுதியாக வழிபாடு செய்கிருள். யாரை? வழக்கமாகத் திருமணநாள் தொட்டு யாரை வணங்கி வந்தாளோ; அந்தக் கணவனை—அதாவது—தன்னை அடுத்த கணம் கொலை செய்யப்போகிற அரிச்சந்திரனை வணங்கினுள் உள்ளமுருகி! எப்படி நிலை? இவள் பெண்ணு? கற்பரசி என்பவளின் ஆற்றல் எத்தகையதென்பதைக் கவிஞர் இக்காட்சியில் ஒப்பற்ற ஓவியமாக்கிக் காட்டுகிருர் :

"வழக்கினென்று நீ வழிபடு தெய்வத்தை வணங்கிக்
கிழக்கு நோக்கி 'ஈண்டு இரு' எனக் கிளிமொழி மடந்தை
பழக்கமான அக் கணவனைப் பரவி என் ஆவி
இழக் கற்கு அஞ்சி, நீ அறம் வழுவேல் என இயம்பும்''
(ம. கா: 133)

இறக்கும்போது சந்திரவதி தன் கணவனை நோக்கி என்ன வேண்டுகிருள்? 'என் உயிர் போய்விடுமே; ஆருயிர்க் காதலியைக் கொலை செய்ய வேண்டியிருக்கிறதே! என்று அச்சங்கொண்டு, அறத்தினின்று வழுவிட எண்ணுதீர்கள்'' என்கிருள். அறத்தின்பால் எவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை அவளுக்கிருக்கிறது! என்பதை எண்ணிஞல் நம்முள்ளம் உருகும். ''காதலுணர்ச்சிக்காக அறத்தைக் கைவிடக் கூடாது'' என்ற அறிவுரையைக் காதற் கணவனுக்கே அறிவுறுத்தும் அறக் காதலியாகக் காட்சியளிக்கிருள் சந்திரவதி. இத்தகு பண்போவியப் படைப்பை உருவாக்கிய வீர கவிஞரின் புலமை மாண்பை என்னென்று போற்றல் சாலும்? பண்போவியப் படைப்பில் இது ஒரு ஒப்பற்ற வெற்றி.

உலகத் தாழ்வை நம்பி அரிய தவத்தை-அறத்தை-உண்மையை விடுதல் கூடாது என்றும், எல்லா அறங்களிலும் வாய்மையே ஈடில்லாதது என்றும் வீர கவிஞர் 'கதைத்

தலைவி—தலைவன்' வாயிலாகக் காப்பியத்தின் உயரிய பகுதியில் 'உயிர்க் கருத்தாக' முழக்குகிறார் :

"பொருந்து நீத்தத்தில் புற்புத வாழ்வை நீமெய் யென்று
அருந்தவத் தையும் அறத்தையும் மெய்யையும் விடுத்து
வருந்தல் மன்னவ! வழிவழி சிறக்க!' என வாழ்த்தி
யிருந்தபின் சுடர்வாள் படைவலக் கையில் எடுத்தான்"
(ம. கா :)

"உலகுயிர்க்குளலாம் பசுபதி ஒருமுதல் ஆயின்
அலகில்சீருடை அவன்மொழி மறையெனின் தன்கண்
இலகுஅறம் பலவற்றினும் வாய்மை ஈடுஇலதேல்
விலகுறாமல் அவ்வாய்மையை விரதமாக் கொளியன்யான்."
(ம. கா :)

'நல்லோரின் உள்ளத்தொடர்பு நல்லோர்கே விளங்கும் என்ற கருத்தை,

"நல்லவர் மனத்தொடர்ச்சி நல்லவர்க்கு உற்றதேபோல்
பல்லவம் பொழிலும் ஆறும் படுமணல் பரப்பும் வெற்பும்
புல்லும் மான்மரையும் தோலும் மேதியும் புள்ளுந் தூரத்தே
எல்லவர் தமக்குந்தோன்ற வெண்ணிலா வெறித்தது இந்து."
(மீ. கா :)

எனும் பாடலில் வீர கவிஞர் ஆள்கின்றமை உணர்தற் குறித்து.

வீரகவிஞர் காப்பியத்தில் கருத்துக்களை எத்துணைத் திறமையோடு, இடமறிந்து பொருளறிந்து உணர்வு நலத்தோடு ஆள்கின்றார் என்பதை இதுகாறும் ஆராய்ந்தமையால் நன்குணரலாம்.

இவ்வழியை அறிந்து, இக்கால எழுத்தாளர்களும் 'அறிவிலக்கியங்களைக் "கருத்திலக்கியங்களை உருவாக்குதல் இன்றியமையாததாம்.

தமிழ் வாழ்க!

ஆதிமந்தி

ச. பாலசுந்தரம்

காட்சி 6.

நடிகர் : கூத்தன் — ஆட்டனத்தி — இசைமுகிலோன் — சரத் குமரன்

இடம் : கூத்தன் வீடுட் இசை மன்றம்

காலம் : வைகறை

[அரசன் ஆணையின் பேரில் அரண்மனைக்குச் செல்லும் கூத்தன் தன் மகனையும் ஆட்டனத்தியையும் அச் செய்தியைச் சொல்ல அழைக்கிறான்]

கூத்தன் :—

ஆரங்கே... இசைமுகிலா! ....

[கூத்தன் அழைத்த குரல் கேட்டு வந்த ஆட்டனத்தி]

ஆட்டனத்தி :— [வந்து வணங்கி]

.... என்ன வேண்டும்

கூத்தன் :—

அரண்மனைக்கு யான்வருமா றுணை என்று
வீரன் ஒருவன் சொல்லிப் போனான்—சென்று
வேந்தரைக் கண்டழைத்த செய்தி அறிந்துமீள
நேரமிகும் ஆதலினால் இசையை மட்டும்
நீங்கள் பயின்றிருங்கள் ....

ஆட்டனத்தி :—

.... சரி தாங்கள் சென்று
வாருங்கள் அவ்வாறே செய்வோம் ......

கூத்தன் :— [மகிழ்ச்சியோடு]

.... அத்தி!
மன்னர்முன் நீ ஆடும்நாள் வரும் விரைவில்

[என்று கூறிச் செல்லுகிறான் அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த முகிலோன் இசைபயில அப்பொழுது வந்த சரத்குமாரனிடம்]

இசைமுகிலோன் :—

விட்டுதடா சனியன் இன்று ......

ஆட்டனத்தி :— [துயருற்று]

.... முகிலா!ஏன் நீ
வெறுப்பாகப் பேசுகிறாய் ....

சரத்குமாரன் :— [இடைமறுத்து]

.... எங்கே போகும்
கொட்டிலிலே இருந்த சனி போனால் அங்கே
கூரையிலே உள்ளசனிக் கென்ன செய்வாய்

ஆட்டனத்தி :—
எட்டுமட்டும் கெடுக்கின்ருய் அவனை ……
சரத்குமாரன் :— [எள்ளலாக]
… … … … … … ஆமாம்
இடுப்பிலுள்ள கைக்குழந்தை… கெடுக்கி றேன் நான்
இசைமுகிலோன் :
விட்டுவிட்டாய் சொல்லவந்த செய்தி என்ன ?
சரத்குமாரன் :—
வேருென்றும் இல்லை யங்கே இலக்கணத்தில் (51)
நார்உரிக்கும் படலமென்று சொன்னேன் ……
இசைமுகிலோன் :— [திடுக்கிட்டு]
… … … … … … நேற்றே
நாளைக்குக் கேள்விமுறை என்ருர்… நூலைப்
பார்ப்பதற்கே பொழுதில்லை …… ……
சரத்குமாரன் :—
… … … … அதனு லென்ன
யானுந்தான் படிக்கவில்லை…பார்ப்போம் வாவா
சோர்வுமட்டும் காட்டாதே …… ……
இசைமுகிலோன் :—
… … … … என்ன செய்ய ……
சரத்குமாரன் :—
சுகமில்லை உடம்புக்கு (ஹிஹி)
ஆட்டனத்தி :— [வெகுண்டு]
… … … … என்ன சொன்னுய்
ஆர்வத்தாற் பயிலுவதே கல்வி யன்றி
ஆசிரியருக் காகவெனின் அறியாமையே (52)
அகக் கண்ணிற் கொளியேற்றும் கல்விஎன்ற
அமுதுண்ண இளமையிலே வருந்தி நின்ருல்
பகுத்தறிவை இழப்பதொரு பண்பி ழப்போம்
பட்டறிவு விலங்குகளுக் கியற்கை—மண்ணில்
மிகச்சிறந்த மக்களினம் வீறு கொண்டு
விளங்குவது கல்வியினுல் …… ……
சரத்குமாரன் :— [கிண்டலாக]
… … … … … … ஆட்டனத்தீ!
அகத்தியனுய் நீயிருத்தல் ஒன்றே எங்கட்(கு)
அகமகிழ்ச்சி ஆசிரியர்க்(கு)
ஆட்டனத்தி :— [வெறுப்புடன்]
… … … … அடியேன்தான் நான் (53)
[விரைந்து செல்லுகிருன் இருவரும் நகைக்கிருர்கள்]

ஆருங் காட்சி முடிவு

காட்சி 7.

நடிகர் : கூத்தன் இடம் : கூத்தன் வீடு முன்றில்
முல்லையம்மை காலம் : முன்மாலை.

[ஆட்டனத்தியின் வளர்ப்புத் தந்தையான கூத்தனும் ஆதி மந்தியின் வளர்ப்புத் தாயான முல்லையம்மையும் உரையாடுகின்றனர். கூத்தனின் உறவினளாகிய முல்லையின் வளர்ப்பு மகளைத் தன் மகனுக்கு மணமுடித்துக் கொள்ளலாம் எனபது அவன் எண்ணம்.]

முல்லை :—

[பாணன் வீட்டு முற்றத்தில் நின்றபடியே அழைக்க அவன் வர]

கூத்தண்ணு! நலமா? ....

கூத்தன் :— [மகிழ்வோடு]

... ... ஆம் வாஉட்கார்
குடிசைக்கே வருவதில்லை என்னமோ போ...

முல்லை :—

பாத்துரொம்ப நாளாச்சே என்று வந்தேன்
பசங்க எங்கே காணவில்லை ......

கூத்தன் :— [சலிப்போடு]

... ... வருவார்கள் நான்
நேத்தங்கே வர நினைத்தேன் நல்ல திங்கே
நீயாக வந்துவிட்டாய் ... ...

முல்லை :— [அவனைப்பார்த்து]

.... என்ன செய்தி?

கூத்தன் :—

பேத்தியெல்லாம் நலந்தானே

முல்லை :—

... ... இருக்கா

கூத்தன் :— [சிறிது கிளர்ச்சியோடு]

... ... அந்தப்
பெண்ணுக்குப் படிப்பதுதான் வேலை யாமே? (54)

முல்லை :—

ஆடுவதற் கவளுக்கு நேரமில்லை
அடுப்படியில் விடஎனக்கு விருப்ப மில்லை
பாடுவதும் படிக்கிறதும் பொழுது போக்கு
படிப்பெதற்குப் பெண்பிள்ளைக் கென்று சொன்னால்
போடுகின்ற கூச்சல்அப்பா! போதும் போதும்

கூத்தன் :—

போகட்டும்...போகவர சரியாய்ப் போகும்
ஆடுவது பெண்ணுக்குத் தானு சொந்தம்?
ஆட்டனத்தி ஆடுவதைப் பார்த்தால் நீயே (55)

ஆண்மகனைப் போல்ஆட முடியா தென்பாய்
அம்பலத்தில் நடனமிடும் கூத்தனே தான்!

முல்லை :—
காண்கணுமா நீகற்றுக் கொடுக்கும் போது
கல்லும் எழுந்தாடாதா? ... ...

கூத்தன் :— [வருத்தத்தோடு]
... ... ஆட்டமென்றால்
தூண்போல நிற்கின்றான் முகிலோன்... அத்தி

முல்லை :—
சொந்த மகனுயிருந்தால் துலங்கும் பேறு...

கூத்தன் :—
வீண்பெருமை பேசவில்லை ஆட்டனத்தி
வேறுஎன் மகன்வேறாக் கருதவில்லை... (56)

முல்லை :—
நல்லபடி இருக்கட்டும் வருகிறேன் நான்
நாழிமிக ஆகிவிட்ட தண்ணு ... ...

கூத்தன் :— [இடைமறித்து]
... ... ஆமாம்
முல்லையம்மா உன்பேத்தி பற்றி... இன்னும்
முழுவிவரம் கூறுமல் மறைக்கி றாய்ஏன்?
தொல்லையென்றுநீ நினைத்தால் சொல்ல வேண்டாம்
சுழியிருந்தால் நடக்காமல் போய்வி டாது

முல்லை :—
இல்லையண்ணு சொல்லஇது காலமில்லை
எப்படியும் ஒருசமயம் சொல்லத் தானே (57)
வேண்டுமப்போ தெரியாதா? வேளை நாழி
வேந்தருக்கே விருப்பம்போல் அமைவ தில்லை

கூத்தன் :—
நீண்டுகொண்டே போகிறது வயது; நாமோ
நேற்றிருந்த படியின்றைக் கில்லை—இந்த
ஆண்டிற்குள் திருமணத்தை நடத்தி விட்டால்

முல்லை :—
அவன்விருப்பம் அவள்விருப்பம் பார்க்கா மல்நாம்...

கூத்தன் :—
மீண்டுங்கேட் கின்றேன்உன் விருப்பைச் சொல்லு!

முல்லை :—
விதியிருந்தால் நடக்குமண்ணு! வருகிறேன்நான் (58)

[என்று கூறி விரைந்து செல்லுகிறாள் கூத்தன் அவள் கருத் தறியாமல் சோர்ந்த உள்ளத்தோடு வீட்டிற்குள் செல்லுகிறான்]

ஏழாங் காட்சி முடிவு

காட்சி 8.

நடிகர் : ஆட்டனத்தி, இசைமுகிலோன், சரத்குமாரன், ஆதிமந்தி, மருதி, மாணவர்கள், ஆசிரியர்.

இடம் : இயற்றமிழ்ப் பள்ளிக்கூடம் காலம் : காலை

[பள்ளியில் பயிலும் மாணவர்களின் உரையாடல் மூலம் ஆட்டனத்தி ஆதிமந்தி முதலியோரின் இயல்பும் பண்பும் அறிந்து கொள்ளுமாறு நிகழும் நிகழ்ச்சி :— மாணவர்கள் யாவரும் தேர்வு முறை கருதி வந்துள்ளார்கள்]

மாணவன் 1 :—

ஆசிரியர் வருவதற்குள் இன்று தான்டா
அழுமூஞ்சி பள்ளிக்கு வந்திருக்கான் ...

அழுமூஞ்சி :—

பேசாமல் இருடா ... நீ—படிக்கும் போது ...

மாணவன் 1 :—

பிழைபொறுக்க வேண்டுகிறேன் சிறியேன் ...
[மற்றொருவனைப் பார்த்து]
... ... ஏண்டா
தாசானு தாசன் நம் அத்தி எங்கே?

மாணவன் 2 :—

தடியா! நீ படித்துவிட்டாய் என்னை வந்து
கூசாமல் நச்சரிப்புச் செய்கின்றாயோ?

மாணவன் 1 :— [எள்ளலாக]

குணம்பொல்லேன் குலம்பொல்லேன் குறியும் பொல்லேன் (59)
படிப்பவரைக் கெடுக்கின்ற பாவி யானேன்.

மாணவன் 2 :—

பகடிசெய்து விளையாட இதுவா நேரம்
தடிப்பயலே ... ...
[அப்பொழுது சரத்குமாரன் வர]

மாணவன் 1 :— [அவனைப் பார்த்து]

... ... வாருங்கள் தண்டம்! தண்டம்!
தமிழ்மொழிக்கோர் தனித்துணையே வருக! உங்கள்
எடுப்பான ... உடையழகை என்ன சொல்வேன்
இறைவனுக்கே அதுவெளிச்சம் ... ...

சரத்குமாரன் :— [வெகுண்டு]

... ... ஏண்டா இங்கே
படிக்கத்தான் வந்தாயா? ... ...

மாணவன் 1 :— [நகைத்து எள்ளலோடு]

... ... தங்களைப் போல்
பார்ப்பதற்கு வரவில்லை என்ப துண்மை (60)

சரத்குமாரன் :—
பெரும்பேச்சுப் பேசுகிறாய்... இனிமேல்...
மாணவன் :— [அஞ்சுவதுபோல் நடித்து]
... ... வேண்டாம்
பிழைபொறுக்க வேண்டுகிறேன் சிறியேன் ......
சரத்குமாரன் :— [சிறிது கடுமையாக]
... ... இந்தக்
குறும்பெல்லாம் என்னிடத்தில் வேண்டாம். ஆமாம்.

[என்று வெறுப்போடு பார்க்கிறான். அதனைப் பார்த்துக் கொண்டிருந்த இரண்டாமவன் முதல்வனைப் பார்த்து ஏளனமாக]

மாணவன் 2 :—
குளிக்கப்போய்ச் சேற்றையள்ளிப் பூசிக் கொள்ளும்
மாணவன் 1 :—
அரும்புலவோய்! உவமை நயம் வேண்டாம் சொல்லு
மாணவன் 2 :—
ஆசிரியர் வருவதற்குள் இந்த ஏட்டைத்
திரும்பஒருமுறை பார்ப்போம் என்றெடுத்தேன்
தேர்வென்ப துனக்குநினை வில்லை யாடா? (61)
உடனேவம் பளப்பதற்குத் தொடங்கி விட்டாய்?
சரத்குமாரன் :—
உனக்கென்ன படிப்பைவிட்டால் வேறு வேலை?
மாணவன் 2 :—
அடடாநான் உன்பால் வந்துரைத்தேன் பாரு
அவனைப்போல் நீயுமொரு பட்டி... இன்று
விடமாட்டார் கணக்காயர் ....
மாணவன் 1 :— [உள்ளபடியே அஞ்சி]
.... ஏஏ! கொஞ்சம்
விடைசொல்லும் முறைகூறி உதவி செய்யே
சரத்குமாரன் :—
மடையா!இவ் இலக்கணத்தால் பயனுண் டாடா?
வளரும்மொழிக் கிலக்கணம்வல் விரும்பாற் செய்த (62)
விலங்காகும் ; உள்ளத்தில் எழும் உணர்ச்சி
விதிப்படியா எழுகிறது? மாணவர்கள்
கலங்கிநிலை குலையட்டும் என்று பார்த்துக்
கலைவேண்டார் கட்டியதே இலக்கணப் பேய்
ஆட்டனத்தி :—
[அதனைக் கேட்டுக்கொண்டே வருகிறாள். வந்து]
புலங்காணார் இலக்கணத்தைப் புன்மை சொல்வார்
பொங்குகின்ற உணர்வு பெரும் வெள்ளமாகும்
நிங்குழியப் பெருகுகின்ற நீரை ஆறு
நெறிப்படுப்ப தன்றியதை மறைத்தல் உண்டோ? (63)

வழிபலவாய் இருக்குமெனின் வரம்பில் லாத
வாய்க்காலில் நீரின்றிப் போதல் போல,
மொழியுருவம் சிதைந்துகெடும்—அதனு லன்ரே
முதறிஞர் இலக்கியத்திற் கியல்வ குத்தார் ... ...
பழிமொழிவோர் ஒழுக்கத்தின் உயர்வும் வேண்டார்
பாருலகில் அமைப்பு முறை இன்றேல்—மக்கள்
விழியிருந்தும் குருமரனத் திகைப்பார்; மேலும்
வேந்தர்படை அமைச்சாட்சி இவை எதற்கு? (64)

மாணவன் 2 :—

அத்திஉரையால் சிலநான் அறிந்து கொண்டேன்

மாணவன் 1 :—

அழகான சொற்பொழிவே செய்துவிட்டாய்

சரத்குமாரன் :—

வித்தைகளுக் கிலக்கணமே ஆன்மா என்னும்
வியாகரணப் பண்டிதர்போல் பேசு கின்ருய்

அழுமுஞ்சி :—

நித்தியமும் பயில்கின்றேன் எனக்கு மட்டும்
நினைவழிந்து போவதற்குக் காரணம் ஏன்?

ஆட்டனத்தி :—

பத்தியத்தை நோயாளர் மறப்ப துண்டோ?
பாவையரைக் காதலர்கள் மறப்ப துண்டோ? (65)

[அப்பொழுது மருதியும் ஆதிமந்தியும் உள்ளே வருகிருர்கள் சிலர் குறும்பாக நகைக்கின்ருர்கள் அதனை உணராமல் மேலும் அத்தி பேசுகிருன்]

அள்ளியுண்ண வேண்டுமென்னும் ஆசை ... ...

[என்று சொல்லித் திரும்பிய அத்தி அவர்களைக் கண்டு தன் பேச்சு அமைந்த சூழ்நிலை நோக்கி நாணி நிற்கின்ருன். சேய்மையில் ஆசிரியர் வந்துகொண்டிருக்கிருர்.]

மாணவன் 2 :—

ஆசிரியர் வந்துவிட்டார் அமருங்கள் போய்

[ஆசிரியர் வர எல்லோரும் எழுந்து வணங்கி நின்று தமிழ் தாய் வணக்கம் கூறுகின்ருர்கள். ஆசிரியர் அமர்ந்தபின் அமருகின்ருர்கள்—ஆசிரியர் மாணவர்களை நோக்கியவாறே]

ஆசிரியர் :—

பள்ளிக்கின் றெல்லோரும் ... ...

அழுமுஞ்சி :— [அக்குறிப்புணர்ந்து]

... ... வந்துள்ளார்கள்
பார்த்தாலே தெரிகிறதே ... ... அமருங்கள்நும்
உள்ளத்தை ஒருநெறியிற் செலுத்தி நூலின்
ஒண்மையினை உரைசெய்ய அணிய ராமின்!

தெள்ளியநேர் விடையுரைத்தல் வேண்டும்—நன்கு
சிந்தித்துக் கூறுங்கள்—வினவலாமோ? .... (66)

[எல்லோரும் தலையசைக்கிறார்கள் அழுமூஞ்சியைப் பார்த்து]

இலக்கணம் என்றால் என்ன? எழுந்து... நீசொல்!

அழுமூஞ்சி :—

இலக்கணம் என்றால் ...வந்து ...வந்து

ஆசிரியர் — [நகையோடு]

... ... வந்து

அழுமூஞ்சி :—

இலக்கணம் ஓர் அரியபெரும் புலவராலே
இலக்கணமாய் எழுதிய நூல் ஐயா ... ...

ஆசிரியர் :— [வெறுப்பாய்]

... ... முட்டாள்
இலக்கணந்தான் எழுதிய நூல் மற்ற வெல்லாம்
எழுதாமல் மரங்களிலே காய்க்கும்? நீசொல்

மாணவன் 2 :—

இலக்காகச் செய்வதையா ... ...

ஆசிரியர் :—

... ... தெளிவாகச் சொல்

மாணவன் 2 :—

இலக்காக ... ...

ஆசிரியர் :—

... ... எதனை

மாணவன் 2 :—

... ... இலக்கணத்தை

ஆசிரியர் :— [வெறுப்பாக]

... ... மண்டு! (67)

[அடுத்தவனைச் சுட்டுகிறார்]

மாணவன் 1 :—

எல்லோரும் புரியாமல் மயங்கச் சில்லோர்
எதிர்வாதம் செய்துதடு மாறு மாறு
வல்லோர்கள் செய்தபெரும் வகைநூல் ஐயா!

ஆசிரியர் :—

வடித்தெடுத்த அறிஞன் நீ— மொழியை நீங்கள்
கொல்லாமல் குழியுள்வைக் கின்றீர்—ஞானக்
கொழுந்துகளே! பயில்வதற்கோ இங்கு வந்தீர்?
கல்லாமல் எதற்காக வருகின்றீர்கள்?
கவலையில்லை? சரத்குமாரா நீசொல் ——

சரத்குமாரன் :— [தலையைச் சொறிந்து கொண்டே]

... ... ஐயா! (68)
நேற்றைக்கு மிக்கதலை வலி, நான் ... ...

ஆசிரியர் :— [ஏளனமாக]
.... இன்னும்
நீங்கவில்லை அந்தவலி அதுதானே? போ.
மாற்றில்லா மடையர்நீர்...மருதி! நீசொல்

மருதி :—
மாநிலத்தில் கண்ணினுக்கும் கருத்தினுக்கும்
தேற்றமுறும் பொருள்களைநாம் உள்ளவாறு
தெரிந்தறிந்து கொள்வதற்கும் தெரிப்பதற்கும்
ஏற்றமதன் அளவுகுணம் செயல்மற் றெல்லாம்
இருந்தநிலை யோடினிமேல் இருந்தியங்கும் (69)
நிலைமையினை ஒழுங்காக உள்ளங் கொள்ள
நெறிப்படுத்திக் கூறலிலக் கணமென் பார்கள்
கலைமுதலாம் வாழ்க்கைஎனும் கடல்கள் தம்மைக்
கணக்காக அறிவதற்கோர் கருவி என்பார்...

ஆசிரியர் :— [மகிழ்ந்து]
விலைகொடுத்தா பெறமுடியும் கல்வி? யாரும்
மெய்வருந்தி உழைத்தால்தான் அது கிடைக்கும்
[என்று கூறி மருதியை மேலும் கூறுக என்னும் குறிப்பொடு நோக்குகிருர்]

மருதி :—
ஒலிவடிவாய் இயங்கும்மொழி காலந் தோறும்
ஒருநெறியில் வளரவழி செய்யும்நூ லிங்கே (70)
ஏய்ந்தஇலக் கணமாகும் ....

ஆசிரியர் :—
[மருதியை அமர்த்தி அத்தியை நோக்கி]
.... பயன் என்சொல்நீ ?

ஆட்டனத்தி :—
இவ்வுலகில் மக்களென்றும் உளரா வார்கள்
தோய்ந்தகருத் தொழுக்கம் வழக்கிவைகள் மாலும்
தொல்லுலக இயற்கையொரு போதும் மாரு(து)
ஆய்ந்தறிஞர் அந்நாளிற் கண்ட வற்றை
அறிந்துகொளத் துணைபுரிவ திலக்கணம் நாம்
மாய்ந்தபின்னர் நமதுபரம் பரையும் நம்மை
மயக்கமின்றி அறிகருவி அதுவே ஐயா (71)

ஆசிரியர் :—
நம்மொழியின் இலக்கணத்தின் பகுப்பைக் கூறி
நானிலத்தை அறிந்துகொளல் அதனுல் ஆகும்
செம்மையினைத் தெளிவாக முகிலா! நீசொல்!

இசைமுகிலோன் :—
சிறப்பாக எழுத்துச்சொல் பொருளிம் மூன்றும்
செம்மைமிக்க கொண்டுதமிழ் திகழ்வ தாகும்
சேர்ந்தஎழுத் தொலியமைப்பைத் தேருங்காலை

விம்முகின்ற உயிர்பொலியும் அகத் தரும்பி
வெளியாகா ஒற்றெலியோ டஃகல் என்னும் (72)
தண்ணியமுக் கூற்றுலே முதல் சார்பாகும்
தமிழொலியிவ் வுலகில்ஒலி மரபைக் காட்டும்
பண்ணுமொலிக் கூட்டத்திற் பிறந்த சொல்லாற்
பாரில்உள்ள பொருள்,அவைதம் போக்கு செய்தி
எண்ணமிவை தெரியும்பின் பொருள்நூ லாலே
இவ்வுலக வாழ்வுமதன் உயர்வும் தாழ்வும்
திண்ணமுறத் தெளிவாகும் வாழ்வின் மற்றைச்
செய்திகளும் முப்பகுப்பில் அடங்கும் ஐயா (73)

ஆசிரியர் :—

மிகநன்று— பெருமகிழ்ச்சி! அத்தி! இந்த
மேதினியில் நம்முன்னோர் வரலாற்றை இத்
தகுநூலால் தெரிந்துகொள்வ தெவ்வா றாகும்?

ஆட்டனத்தி :—

தமிழ்எழுத்தின் ஒலியளவு செயல்கள் தம்மால்
மிகப்பழைய மொழியெனவும் உலகில் மற்றை
மொழியொலிகள் இவற்றுள்ளே அடங்கு வென்றும்
தகவுடைய பகுப்பாலே தனித் தியங்கும்
தன்மையவென்றும் எளிய இனிமை வாய்ந்த (74)
மொழியினையே உண்டாக்கும் என்றும் கண்டோம்
(அதனுல்) முன்னோரின் இனிமையருள் எளிமை வாய்ந்த
அழியாத எண்ணத்தை இவைகள் காட்டும்
அணிவிளங்க அடிப்படையில் கருத்துக் கொண்ட
பழகுதமிழ்ச் சொற்கள்நம் முன்னோர் கூர்த்த
பண்பும்அவர் பொருள்களைக் கையாண்ட வாறும்
விழியாலும் செவியாலும் நுண்மை யோடு
வியனுலகை அளந்தறிந்த வாறும் காட்டும். (75)
வீரமுடன் வாழுகின்ற வாழ்வை என்றும்
மேன்மையெனக் கொண்டதையும் அரசாள் வேந்தன்
போரிடற்கு முன்பகைவர்க் கறிவித் தன்னுர்
புயவலியோ டெதிர்ந்தக்கால் பொருவ தென்றும்
ஆரிடத்தார் அந்தணர்கள் மகப்பெ ருதார்
அரிவையர்மூத் தோரிளைஞர் படைகை ஏந்தி
நேராதார் இவருடன்போர் நிகழ்த்தார் என்றும்
நீதியினுல் நாட்டிலுள்ளோர் உய்ய வேண்டி (76)
போர்தொடுத்தார் அன்றிவலி காட்டுதற்கும்
புனைந்தார்கள் கழலென்றும் பொருள்நூல் காட்டும்
ஏர்மிகுந்த மாதருடன் இல்லறத்தில்
இனிமைபெற வாழ்ந்தமுறை; ஆழ்ந்த காதல்
தேர்வகைஐந் திணைநிலையாற் பிரித்து ணர்த்தும்
தெளிவான இலக்கணத்தால் தெய்வம் ஒப்பச்

சீர்நிறைந்த மங்கையரை மதித்துப் போற்றிச்
செம்மைபெறப் பழந்தமிழர் வாழ்ந்தார் என்றும் (77)

செப்பியவோர் புறத்திணையால் சிறந்த வீரம்
செறிந்ததமிழ் மங்கையர்நம் நாட்டிற்காக
ஒப்பரிய செயல்பலவும் செய்தா ரென்றும்
ஒழுக்கத்தை உயிரினும்மேல் மதித்தா ரென்றும் ;
இப்புவியின் நிலையாமைத் தன்னைக் காஞ்சி
என்றதிணை யாலுணர்த்தி அறமே யாவும்
தப்பின்றித் தருமென்றும் உணர்ந்தார் என்ற
தமிழ்வரலாற்றினைப் பொருள்நூல் தெளியக்காட்டும் (78)

முக்காலத் திற்குமவை பொருத்த மன்றோ ?
முன்னோரின் அறிவாட்சிப் பண்பை எல்லாம்
எக்காலத்தும் நினைத்து வாழ்த்தித் தாமவ்
விலக்கணத்தின் வழி ஒழுக எண்ணுவார்கள்
தக்கோர் செந்தமிழியலின் சிறப்பைக் காண்பார்
தருமமுள்ள மட்டுமிவை வாழும் ... ...

ஆசிரியர் :— [மகிழ்ந்து]

... ... நன்று
இக்காலத் தொருசிலர்நூல் இயல்பு தேரார்
எதிர்நீச்சுப் புரிகின்றார் இருக்கட்டும்... நீ— (79)

இல்லறத்தின் இயல்பைநம் இலக்கணத்தார்
எவ்வகையில் இயம்பியுள்ளார் என்று சொல்லு ?

ஆதிமந்தி :—

[அடக்கத்துடன் எழுந்து வணங்கி]

வெல்லுகின்ற கல்விமுதல் பத்தும் ஒத்து
மிக்கெழுந்த காதலினால் ஆணும் பெண்ணும்
நல்லதொரு களவியலாற் காதல் மேவி
நட்பமைந்து கற்பொழுக்கம் நடத்து வார்கள்

ஆசிரியர் :—

அல்லதொரு வழியலது நடந்தால் ......

ஆட்டனத்தி :—

[உணர்ச்சியொடு எழுந்து]

... ...! இல்லை
அவ்வாறிங் கொரு போதும் நடைபெறாது (80)

[மாணவர் எல்லோரும் நகைக்கிறார்கள் தான் ஆசிரியர் வினவாமல் விடையளித்தமைக்கு நாணி அமருகிறான் அத்தி தொடர்ந்து ஆதிமந்தி பேசுகிறாள்]

ஆதிமந்தி :—

சொல்லுமுறை யாற்களவு காதல் வாழ்வைத்
தூய்மைசெய்யும் வழிஎன்பார் ... ...

ஆசிரியர் :—
... ... விளங்கக் கூறு

ஆதிமந்தி :—
வில்லொடுவாள் வேலேந்தி வீரந் தோயும்
மேன்மகனைப் பெண்மக்கள் விரும்பி னுர்கள்
வல்லியெனும் மங்கையர் நாண் அச்சங் கற்பு
வாய்ந்துநெறி பிறழாமல் ... ...

ஆசிரியர் :—
[மாணவர் நகைத்தலைப் பார்த்து]
... ... நகைப்பெ தற்கு?

ஆதிமந்தி :—
புல்லியவஞ் சம்பொய்கள் காதல் வாழ்வில்
புகுதலிலை என்பதையும் பொருள்நூல் காட்டும் (81)

ஆசிரியர் :—
உளமொத்த காதலுக்கோர் எடுத்துக் காட்டாம்
ஒருசெய்யுள் கூறுக நீ! ... ...

மாணவன் :— [குறும்பாக]
... ... எடுத்துக்காட்டு
வெளியேபோய் எதற்காகத் தேட வேண்டும்
விளக்கமுற இங்கேயே ... ...

ஆசிரியர் :— [வெகுளியொடு]
... ... வினவிற் கேற்பத்
தெளிவான விடைவேண்டும் ... ...

மாணவன் 1 :— [நகையோடு]
... ... தெரிந்து கொண்டேன்

ஆசிரீயர் :—
சிறுமைவரப் பேசாமல் விடையைச் செப்பு

மாணவன் 1 :—
களவொத்த காதலுக்கு மேற்கோள் இங்கே
கவிதைகளின் சிறப்பாக ... ...

ஆசிரியர் :—
... ... என்ன சொன்னுய்? (82)

மாணவன் 1 :—
குறுந்தனிப்பா ஒன்றுளதே அதனைத் தான்யான்
குறிப்பாகக் கூறுகின்றேன் ... ...

ஆசிரியர் :—
... ... எந்தப் பாட்டு?

மாணவன் 1 :—
அறிந்ததுதான் எல்லோரும் யாயும் ஞாயும்

ஆசிரியர் :—
அப்படியா? நன்றதனை முழுவ துஞ்சொல்

[முதல் அடி தொடங்குகிருன் பிற நினைவில்லாமல் விழிக்கிருன் ஆசிரியர் ஆட்டனத்தியைச் சொல்லுமாறு சுட்டுகிருர்]

ஆட்டனத்தி :—

ஆசிரியர் :—

சிறந்தநறுஞ் செய்யுளிதைச் செய்த மேலோர்
செம்மைமிக்க காதலியல் பறிந்தா ராவார்
மறந்துவிட்டார் அவர்பெயரை! ... ...

ஆதிமந்தி :—

.... பெண்பா லார்தாம்
மாண்புள அப்புலவரென எண்ணுகின்றேன் (83)

ஆசிரியர் :—

எப்படி? ... ...

ஆதிமந்தி :—

—— பெண்ணுளந்தான் அன்பின் தூய
இயல்பறியும் ஆணுள்ளம் குரங்கை ஒப்பத்
தப்புமென்ற செய்தியை நம் சங்கப் பாக்கள்
தவருமற் செப்புதலே சான்றும்... மேலும்

ஆட்டனத்தி :—

அப்படியே எண்ணிவிடக் கூடா சான்ருேர்
அகப்பொருளின் இலக்கணங்கள் அமையச் செய்யும்
ஒப்பற்ற கவிதைகளுள் உண்மை யூடே
உயர்ந்த புனைந்துரை யாவும் கலந்திருக்கும் (84)
ஊடலெனுந் துறைவிளங்க மருதம் பாடும்
உயர்புலவர் பலகவிகள் யாத்துள் ளார்கள்
ஆடலொடு பாடல்அருங் கூத்தி வைகள்
ஆடவரை வயப்படுத்திக் காம வெள்ளத்
தீடுபடச் செய்யுமுலகியல் நோக் கத்தால்
இவைபோன்ற பாடல்சிலர் செய்தார் யாவும்
நாடகஞ் சேர் வழக்கமென இலக்கணத்துள்
நன்ருக நவின்றுள்ளார் நானிலத்தில் (85)
குறையுடையார் இருக்கத்தான் செய்வார் என்றும்
குன்றைப்போல் சலியாத பண்பு கொண்ட
நிறையுடைய ஆடவரும் தமிழ கத்தில்
நிலையாக உள்ளாரென் பதையும் நம்மோர்
அறியாமல் இலையிந்த உண்மை தொல்லோர்
அகப்பொருள் நூற்கவிதைகளே நன்கு காட்டும்

ஆசிரியர் :—

திறமிக்க உங்களுரை கேட்டேன் உள்ளம்
தேனூறுகின்ற துங்கள் ஊக்கம் வாழ்க! (86)

[எல்லோரும் எழுந்து ஆசிரியருக்குப் பணிவு தெரிவிக்கிருர்கள் ஆசிரியர் செல்லுகிருர்—பள்ளி நிறைவுறுகிறது]

எட்டாங் காட்சி முடிவு

CONNEMARA PUBLIC LIBRARY
P16-384

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER

"THE TAMIL POZHIL"

(MONTHLY)

FORM IV

Rule 8 of the Press and Registration of Books Act, 1867.

1. *Place of Publication* ; Thanjavur.
2. *Periodicity of its Publication* : Monthly.
3. *Printer's Name* : Sri N. Chinniah, for T. V. M. Mahalingam Mahalingam Press.

   Nationality : Indian.

   Address : 1321, South Rampart, Thanjavur.
4. *Publisher's Name* : S. Swayamprakasam, B. A., B. L.,

   Nationality : Indian.

   Address ; Karanthai Tamil Sangam, Karuntattamkudi, Thanjavur.
5. *Editor's Name* : S. Swayamprakasam, B. A., B. L.,

   Nationality : Indian.

   Address : President, Karanthai Tamil Sangam, Karuntattamkudi, Thanjavur.
6. *Name and address of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital.* — KARANTHAI TAMIL SANGAM THANJAVUR.

I. S. Swayamprakasam, hereby declare that the particulars above are true to the best of my knowledge and belief.

?1—3—63

S. SWAYAMPRAKASAM,
Signature of Publisher.

Regd. No. M. 7681.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்.

தொல்–சொல்—தெய்வச்சிலையார் உரை	...	2—50
நெல்லை வருக்கக் கோவை	...	0—12
சித்தரந்தாதி	...	0—12
சுருதி வீணை	...	0—25
தமிழரசி குறவஞ்சி	...	0—62
பரத சாத்திரம்	...	1—00
கவியரசு நினைவு மலர்	...	1—00
சிவமும் செந்தமிழும்	...	0—25
சிலப்பதிகாரம் — புகார்க் காண்டம்	...	0—50
Garland of Tamil Poetry	...	2—00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்)	...	0—50
அப்பர் புகழ்மாலை	...	0—25
சுந்தரர் புகழ்மாலை	...	0—25
பாரதசார வெண்பா	...	1—00
தொல்–பொதுப்பாயிரம் உரை	...	0—12
யவன மஞ்சரி (த. இராமநாத பிள்ளை B. A., யாழ்ப்பாணம்)		1—50
இந்தியத் தலயாத்திரை (T. B. தாஸ் ராவ் B. A.,)	...	1—25
புலவராற்றுப்படை (அமிர்தம் சுந்தரநாத பிள்ளை)	...	0—25
கரந்தைக் கட்டுரைக் கோவை	...	1—75
தமிழ்ப் பொழில் துணர்கள் 1, 4, 5, 6, 8, 29, 31, 32, 34, துணர் ஒன்றுக்கு (12 மலர்கள்)	...	4—00

கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அளிக்கப்பெறும் நன்கொடைகள் வருமான வரிச் சட்ட பிரிவு 15-Bயின்படி வருமான வரிவிதிப்பிலிருந்து விலக்கப்பெற்றிருக்கின்றனவென்று சென்னை வருமானவரிக் கமிஷனர் அவர்கள் தமது 13–9–60-ஆம் நாளைய சி. நெ. 212 (27) 58 உத்தரவில் அறிவித்திருக்கிறார்கள்.

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள்நாடு.	மலேயா, இலங்கை முதலிய வெளிநாடுகள்
முன்பணம் ஆயுள் வரி	ரூ.	50 00	50 00
,, ஆண்டு வரி சங்க உறுப்பினர்க்கும் தலைமையாசிரியர் ஒப்பம்பெற்ற தனிப்பட்ட மாணவர்க்கும்		2 00	2 50
,, ,, ஏனையோருக்கு		3 00	3 50

Edited and Published by S. Swayamprakasam, B. A., B. L., Karanthai Tamil Sangam, Tanjore. Printed by N. Chinniah for T. V. M. Mahalingam Mahalingam Power Press, 1321, South Rampart, Tanjore